# ஒட்டன்சத்திரம் நகராட்சி

மதுரை மண்டலம், ஒட்டன்சத்திரம் நகராட்சியில் அரசாணை(நிலை) எண். 67 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(தேர்தல்) நாள்.29.06.2017–ன்படி 1920–ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் விதி 375 B–ன் கீழ் அவசரக் கூட்டம் நாள். 25.05.2018 (வியாழக் கிழமை) அன்று மாலை 04.00 மணியளவில் நடைபெற்றது.

நகராட்சி அலுவலகம்
நாள்: 24.05.2018

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்
ஒட்டன்சத்திரம் நகராட்சி

<u>பொருள் –1</u>

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் நடைபெற்ற திட்டபணிகளை தமிழக அரசின் ஓராண்டு நிறைவு சாதனை சிறப்பு மலராக தினசரி நாளிதழ்களில் வெளியீடு செய்ய செய்தி மக்கள் தொடர்புதுறை திண்டுக்கல் அவர்களால் 28/செ.ம.தொ/2018 நாள்.19.03.2018–ம் நாளில் பரிந்துரைக்கப்பட்டு மேற்படி சிறப்பு மலர் வெளியிடு செய்தமைக்காக கீழ்காணும் நாளிதழ் நிறுவனங்களிலிருந்து வரப்பெற்றுள்ள பட்டியல் அனுமதிக்கு.

| வ. எண் | விபரம் | தொகை |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1 | தினமலர் | ரூ.15,792 |
| 2 | தினமணி | ரூ.26,250 |

<u>அலுவலகக்குறிப்பு :</u>

1. அனுமதிக்கலாம்
2. தமிழக அரசின் ஓராண்டு நிறைவு சாதனை சிறப்பு மலராக தினசரி நாளிதழ்களில் வெளியீடு செய்தமைக்கான செலவினத்தை தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 87**

அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் 2</u>

ஒட்டன்சத்திரம் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணியின்படி நகர் பகுதியில் தினம் சேகரம் ஆகும் திடக்கழிவில் மக்கும் மற்றும் மக்கா குப்பைகளில் தரம் வாரியாக பிரித்து பகுப்பாய்வு செய்து சான்று வழங்க 05.04.2018 அன்று தனி அலுவலரின் அவர்களின் முன் அனுமதி பெற்று Green link Analytical and Research Laboratory India Pvt.ltd, Coimbatore. நிறுவனத்தில் பகுப்பாய்வு செய்து சான்று பெற்றதற்கான கட்டணம் ரூ.15930/– தொகை வழங்கியதை தனி அலுவலரின் அனுமதிக்கு,

<u>அலுவலகக்குறிப்பு :</u>

1. அனுமதிக்கப்பட்டது.
2. தொகை வழங்கப்பட்டதை மன்ற ஏற்கலாம்.

**தீர்மான எண். 88**

அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் –3</u>

ஒட்டன்சத்திரம் நகராட்சி 17–வது வார்டு பழனிக்கவுண்டன் புதுரர் செல்லும் சாலை புல எண். 503/1, 503/2 மற்றும் 307/1பி உள்ள இடத்தினை நகராட்சி ஆக்கிரமிப்பு செய்து சாலை அமைத்துள்ளதாகவும், அதற்கான இழப்பீட்டுத் தொகையை வழங்க கோரி திரு.ப.சின்னச்சாமி மற்றும் சண்முகவேல் ஆகியோர்களால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண்.WP.No.3674/2012–ன்படி மாவட்ட ஆட்சித்தலைவர், திண்டுக்கல் மற்றும் ஆணையாளர், ஒட்டன்சத்திரம் நகராட்சி ஆகியோர்களை எதிர் தரப்பாக சேர்த்து வழக்கு தொடர்ந்துள்ளதை தொடர்ந்து மேற்படி வழக்கில் மாவட்ட ஆட்சித்தலைவர், திண்டுக்கல் அவர்கள் சார்பாக அரசு வழக்கறிஞர் திரு.பி.பகவதி அவர்கள் ஆஜராகி வழக்கினை எதிர் கொண்டமைக்கான வழக்கு கட்டணமாக ரூ.9,500/– கேட்டு வரப்பெற்றுள்ள பட்டியல் தொகை வழங்க அனுமதிக்கு

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. அரசு வழக்கறிஞர் பட்டியல் தொகையினை தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழங்கியதையும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம். (ந.க.எண்.83/2012/இ1)

**தீர்மான எண். 89**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 4**

ஒட்டன்சத்திரம் நகராட்சி ஆணையர் குடியிருப்பு கட்டிடத்தில் UPS கருவி மின் கசிவு காரணமாக பழுதடைந்து பயன்பாடற்ற நிலையில் இருந்ததை UPS பயன்பாட்டின் அவசர அவசியம் கருதி புதியதாக UPS கருவி மற்றும் வயரிங் பணிகள் முதலாவைகள் மேற்கொண்டமைக்காக MMK Construction, Oddanchatram மூலம் வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.47200/– மட்டும் வழங்க அனுமதிக்கு

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. UPS பயன்பாட்டின் அவசர அவசியம் கருதி பணி மேற்கொண்டதையும், அதற்கான செலவினத்தை முன் அனுமதி பெற்று நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 90**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 5**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் உள்ள பழைய தினசரி நாளிதழ்கள் அதிக அளவில் உள்ளதால் அந்நாளிதழ்களை கழிவு செய்ய வேண்டியுள்ளதால் மேற்படி நாளிதழ்களை பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரி கழிவு செய்ய அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. கழிவு செய்ய வேண்டிய அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி மேற்கொண்டதை அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 91**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் –6**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 17 வது வார்டு பழனிக்கவுண்டன் புதுார் பகுதியில் செயல்பட்டு வரும் நகராட்சிக்கு சொந்தமான எரிவாயு தகன மேடைக்கான உரிமம் 31.03.2018 உடன் முடிவடைவதால், மேற்படி தகனமேடை உரிமத்தினை 01.04.2018 முதல் மூன்று ஆண்டுகளுக்கு புதுப்பிக்க திண்டுக்கல், தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியத்திற்கு கட்டணத் தொகை ரூ.85200/– செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. எரிவாயு தகன மேடை பயன்பாட்டின் அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதையும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 92**

அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 7

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12503/2018/ஆர்1 நாள்.21.05.2018–ல் தெரிவித்துள்ளவாறும் ஒவ்வொரு ஐந்தாண்டிற்கும் ஒருமுறை தொழில்வரி சீராய்வு செய்யப்படுவதன் அவசியம் கருதியும், தற்போது நடைமுறையில் உள்ள தொழில்வரி தொகையில் 25%–க்கு குறையாமலும் 35%–க்கு மிகாமலும் கீழ்க்கண்டவாறு உயர்வு செய்து நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | அரையாண்டு சராசரி வருமானம் (ரூபாயில்) | நடப்பு தொழில்வரி அரையாண்டிற்கு (ரூபாயில்) | 25% உயர்த்தும் பட்சத்தில் 01.10.2018 முதல் (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | 21000 வரை | – | – |
| 2 | 21001 முதல் 30000 வரை | 125 | 155 |
| 3 | 30001 முதல் 45000 வரை | 300 | 375 |
| 4 | 45001 முதல் 60000 வரை | 590 | 740 |
| 5 | 60001 முதல் 75000 வரை | 890 | 1110 |
| 6 | 75001 முதல் அதற்கு மேலும் | 1250 | 1250 |

எனவே ஐந்தாண்டுகள் முடிவடைவதால் நகராட்சி நிதி நிலமையை மேம்படுத்திட தற்போது நடைமுறையில் உள்ள தொழில்வரியை 25%–க்கு குறையாமலும் 35%–க்கு மிகாமலும் கலம் 4–ல் உள்ளவாறு உயர்த்தி 01.10.2018 முதல் நடைமுறைப்படுத்தலாம் தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு.

### அலுவலக குறிப்பு

1. அனுமதிக்கலாம்.
2. நகராட்சி நிதி நிலையை மேம்படுத்திட தொழில்வரியை 25%–க்கு குறையாமலும் 35%–க்கு மிகாமலும் உயர்த்துவது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

**தீர்மான எண். 93**

அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 8

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் 2015–16ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் பேருந்து நிலையம் உட்பகுதி மற்றும் ஏ.டி காலனியில் இரு பொதுசுகாதார வளகங்கள் கட்டப்பட்டதில் கூடுதல் அபிவிருத்தி பணிகளுக்கான மின் வசதி,செய்தல், மோட்டார் அறை கட்டுதல், ஸ்டெயின்லாப் ஸ்டீல் கேட்டுகள் சப்ளை செய்து பொருத்துதல், தணிணீர் வசதி செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ள ரூ.5.00 இலட்சத்திற்கு தனி அலுவலர் அவர்களால் தீர்மான எண்.77 நாள். 24.04.2018 ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து 10.05.2018 ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திருமதி. எஸ்.ராதா, மதுரை | 0.09 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | M/s.ஸ்கை வில் சிவில் கோர், மதுரை | 2.49% மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் இரண்டு ஒப்பந்ததாரரிடம் இருந்து டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி வ.எண்.1–ல் உள்ள திருமதி.எஸ்.ராதா, மதுரை ஒப்பந்த ஒப்பந்ததாரரிடமிருந்து 0.09 சதவிகிதம் மதிப்பீட்டு விலையில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி 0.09 சதவிகிதம் மதிப்பீட்டு விலையில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி.எஸ்.ராதா, மதுரை ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தை ஏற்று தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை அனுமதிக்கலாம். (ந.க.எண். 771/2017/இ1)

**தீர்மான எண். 94**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 9**

ஒட்டன்சத்திரம் நகராட்சி குடிநீர் விநியோகம் மேற்கொள்ளும் விருப்பாச்சி தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து விநியோகிக்கப்படும் குடிநீர் சுத்திகரிப்பு செய்யும் பொருட்டு சுத்திகரிப்பு பயன்பாட்டிற்கு தேவையான ஆலம் கொள்முதல் செய்ய வேண்டி உள்ளதால் 2018–19 ஆண்டிற்கு தேவையான ஆலம் கட்டிகள் கொள்முதல் செய்ய உத்தேச செலவினம் தொகை ரூ.2.00 இலட்சம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. குடிநீர் தேவையின் அவசர அவசியம் கருதி அரசு சார்பு நிறுவனங்களில் இருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கு தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று சப்ளை உத்தரவு வழங்கியதையும், மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 95**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 10**

ஒட்டன்சத்திரம் நகராட்சி சின்னக்குளம் பகுதியில் நுண் உரம் தயாரிப்பு கூடம் கட்டுமான பணி நடைபெற்று வருகிறது. அப்பகுதியில் உள்ள மண் முழுவதும் குப்பை கூலங்களால் நிரப்பப்பட்டுள்ளதால் மண்ணிற்கு போதிய உறுதி தன்மை இல்லை. இந்நிலையில் அண்ணா பல்கலைகழகம் திண்டுக்கல், அவர்களால் மண் பரிசோதனை செய்து தயாரிக்கும் திறன் அளவினை கண்டறிந்து தரத்தினை வடிவமைத்து செய்துதர கோரப்பட்டதில் மண்ணின் உறுதி தன்மை CBR Value மிகவும் குறைவாக உள்ளதால் நுண் உரம் மேற்படி பகுதியில் தொட்டிகள் கட்டினால் தலப்பகுதி இடிந்து இழப்பு ஏற்படும் என்பதால், RCC Flooring அமைக்கும்படி வடிவமைப்பு டிசைன் பெறப்பட்டது. எனவே மேற்தளம் RCC Flooring அமைத்தால்தான் நுண் உரம் தயாரிப்பு கூடம் தளப்பகுதியினை சேதாரம் இல்லமால் கட்ட இயலும் என்பதால் ரூ.9.80 இலட்சத்திற்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நுண் உரம் கட்டுமான பகுதியினை விரைவில் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டியுள்ளதால் மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள அதற்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 96**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 11</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சியை திறந்தவெளிக் கழிப்பிடமில்லா நகராட்சி அறிக்கை செய்ய மத்திய அரசின் நகர்புற அமைச்சகத்தின் கீழ் மூன்றாம் நபர் ஆய்வான QCI ஆய்வு செய்ததில் வார்டு எண்.10 தாராபுரம் சாலை சின்னக்குளம் மேல் கறை பகுதியில் திறந்தவெளி கழிப்பிடம் இருப்பது கண்டறியப்பட்டதால், நகராட்சியை திறந்தவெளி கழிப்பிடமில்லா நகராட்சியாக அறிக்கை செய்வதில் குறை ஏற்பட்டது. இதை சரி செய்யும் பொருட்டு மேற்படி பகுதிகளில் 8 இருக்கைகள் கொண்ட கழிப்பறை கட்ட துப்புரவு ஆய்வாளர் அறிக்கை வழங்கியதன்படி, பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி மேற்படி இடத்தில் சமுதாய கழிப்பிடம் கட்டவும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு தனி அலுவலர் அவர்களால் தீர்மான எண்.70 நாள். 24.04.2018 ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து 15.05.2018 ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.எம்.ராமசாமி | 0.09 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | திரு.அய்யாவு | 2.49% மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் இரண்டு ஒப்பந்ததாரரிடம் இருந்து டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி வ.எண்.1–ல் உள்ள திரு.எம்.ராமசாமி ஒப்பந்த ஒப்பந்ததாரரிடமிருந்து 0.09 சதவிகிதம் மதிப்பீட்டு விலையில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி 0.09 சதவிகிதம் மதிப்பீட்டு விலையில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.ராமசாமி, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தை ஏற்று தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 97**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் – 12</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2017–2018–ன் கீழ் 1 முதல் 18 வார்டு பகுதிகளில் ரூ. 800 இலட்சம் மதிப்பீட்டில் சாலை, வடிகால் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள அரசாணை எண். 44 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம்.ஏ2) நாள்.24.02.2016–ன்படி, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 21422/2017/இ3 நாள். 03.10.2017–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களால் ந.க.எண். 24545/2017/டி.ஓ2 நாள். 14.11.2017–ல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிகளில் சிப்பம்–4க்கான ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறாத நிலையில் 19.04.2018 மேற்படி பணிக்கு 19.04.2018–ம் நாள் மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை அவர்கள் வாயிலாக அக்கார்டு விளம்பர நிறுவனம், சென்னை மூலம் மாநில அளவிலான அரசு ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் மற்றும் தினசரி நாளிதழ்களில் மாநில அளவில் 04.04.2018–ம் நாள் வெளியீடு செய்தமைக்கான பட்டியல் தொகை ரூ.74,550/– மட்டும் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை சென்னை அக்கார்டு விளம்பர நிறுவனத்திற்கு வழங்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

1. அனுமதிக்கலாம்.
2. திட்டப்பணிகளுக்கான மாநில அளவிலான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்தமைக்கான பட்டியல் தெரிகையினை தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும், மேற்படி செலவினத்தை நகராட்சி நிதியிலிருந்து மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 98**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்–13</u>**

நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.7234/2014/ஆர்1 நாள்.15.03.2018 –ல் தெரிவித்துள்ளவாறு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் செயல்பட்டு வரும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு சொத்துவரி நிர்ணயம் செய்வது தொடர்பாக தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 –ல் திருத்தம் செய்யப்பட்டதை 28.04.2018 தேதிய தினமணி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கான கட்டணம் ரூ.25452/– எக்பிரஸ் பப்ளிகேசன் மதுரை நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு :**

அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.463/2018/பி1)

**தீர்மான எண். 99**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 14</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் பொது சுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வீடு வீடாக சென்று குப்பை சேகாரம் செய்யும் பணிக்கு 5 மகளிர் சுய உதவிக்குழு மூலம் 74 பணியாளர்கள் பணி புரிந்து வரும் நிலையில் மேற்படி பணியினை தனியார் மயமாக்கி பணிய மேற்கொள்ள அனுமதிக்கான கருத்துரு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ள நிலையில் மேற்படி பணியில் தோய்வு ஏற்படாமல் மேற்கொள்ளும் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி நடைமுறை முடிவுறும் காலம் வரையில் பொதுசுகாதாரப் பணிகள் பாதிக்காமல் இருக்கும் பொருட்டு, 74 பணியாளர்களை மாவட்ட ஆட்சியர் விலைவிகிதத்தில் இதர பணப்பலன்கள் ஏதுமின்றி 2018–2019 ஆம் ஆண்டுக்கு பணியமர்த்திக்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. அனுமதிக்கலாம்.

2 பொதுசுகாதாரப்பணிகளின் அவசர அவசியம் கருதி தனியார் மயமாக்கலுக்கு முந்தைய காலங்களில் பணியமர்த்திய 5 சுய உதவிக்குழு பணியாளர்களுக்கு முன்னுரிமை அளித்தும், தினக்கூலியினை மாவட்ட ஆட்சியர் விலைவிகிதத்தில் இதர பணப்பலன்கள் ஏதுமின்றி பணியமர்த்திக் கொள்ளவும் அனுமதிக்கலாம். (ந.க.எண். 185/2017/இ1)

**தீர்மான எண். 100**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 15</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் புதிய பைப்லைன் அமைக்க அலுவலகம் முதல் தாராபுரம் சாலை வரை, சி.எஸ்.ஐ. சர்ச் முதல் 15வது வார்டு பிரிவு வரை மற்றும் கஸ்தூாரி நகர் முதல் நாயக்கனூர் பாலம் வரை புதியதாக பைப்லைன் அமைக்க நகராட்சி பொறியாளரால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டதை தொடர்ந்து மதிப்பீட்டுத் தொகை ரூ.9.50 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்
2. பொதுமக்களின் நலன் கருதி குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொண்டு அதற்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 101**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 16</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான காந்தி மார்க்கெட் கட்டண கழிப்பறை பழுதடைந்துள்ளதால் அதனை மராமத்து பணி மேற்கொள்ள உத்தேச செலவினத் தொகை ரூ.2.50 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்
2. பொதுமக்கள் நலன் கருதி பணியின் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொண்டு அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்

**தீர்மான எண். 102**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 17</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி நவீன எரிவாயு தகனமேடையில் உள்ள புகைதள்ளும் குழாய் பழுதடைந்து மிகவும் மோசமான இடிந்துவிலும் நிலையுள்ளதால் அதனை புதியதாக மாற்றியமைக்க நகராட்சி பொறியாளரால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டதை தொடர்ந்து மதிப்பீட்டுத் தொகை ரூ.9.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொண்டு அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்

**தீர்மான எண். 103**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 18</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 17வது வார்டு பழனிக்கவுண்டன் புதூர் செல்லும் வழியில் உள்ள நவீன எரிவாயு தகனமேடையில் பராமரிப்பு பணி மேற்கொள்ள நகராட்சி பொறியாளரால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டதை தொடர்ந்து மதிப்பீட்டுத் தொகை ரூ.6.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொண்டு அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்

**தீர்மான எண். 104**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 19</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் குடிநீர் விநியோக பயன்பாட்டிற்குரிய பிரதான மெயின் மற்றும் பகிர்மான குழாய்களின் பொருத்தப்பட்டுள்ள கேட்வால்வு பழுது அடைந்துள்ளதை சரி செய்ய நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.4.90 லட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி பணியினை ஒப்பந்தபுள்ளி கோரி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 105**

அனுமதிக்கப்பட்டது.

இடம். ஒட்டன்சத்திரம்.
நாள். 24.05.2018

தனிஅலுவலர்
மற்றும் ஆணையாளர்,
ஒட்டன்சத்திரம் நகராட்சி.